# பதிப்புரை

ஆதி பதிப்பகத்தின் நான்காவது நூலாக 'கிட்டி'யை உங்களுக்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கிட்டியின் கதாநாயகன் பசுமை மாறா 'காடு'தான்.

காடுகளில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையை உடனிருந்து கண்டு, அனுபவித்து நாவலைப் படைத்துள்ளார் செ. யோகநாதன்.

கற்பனைகளைத் தோலுறித்துவிட்டு, உள்ளதை உள்ளபடி அழகியல் தன்மையோடு கொடுத்திருக்கிறார்.

இவ்வகை நாவல் - தமிழுக்கு புதுசு.

அட்டைப்படத்தை அழகுற தீட்டியளித்த 'ட்ராஸ்கிமருது' அவர்களுக்கும், இந்நூல் வெளிவர காரணமாக இருந்த தோழர் ராகவராஜ் அவர்களுக்கும், இந்த அரிய படைப்பை இரண் டாவது பதிப்பாக வெளியீட ஒப்புதல் வழங்கிய படைப்பாளி செ. யோகநாதன் அவர்களுக்கும் மற்றும் என்னுடன் இணைந்து பணியாற்றிய தோழர்கள் அனைவருக்கும் நன்றிகள் - பல... பல!

**என்றும் அன்புடன்**
**பொன். சந்திரசேகரன்**
**ஆதி பதிப்பகம்,**
**சென்னை – 108.**

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

'கிட்டி' வெளியான இரண்டாவது ஆண்டுக்குள் இரண்டாம் பதிப்பு வெளியாகும் செய்தி என்னைப் போலவே இலக்கிய ஆர்வலர்களுக்கும் மகிழ்ச்சி தருமென்று நம்புகிறேன்.

இரண்டாவது பதிப்பு அச்சாகிக் கொண்டிருக்கிற வேளையிலேயே 'கிட்டி'யைப் பற்றி இன்னொரு சந்தோஷமான செய்தி எனக்குக் கிடைத்தது. இலங்கை சாகித்திய மண்டலம், 'கிட்டி'க்கு சிறந்த படைப்புக்கான விருதையும், முப்பதாயிரம் ரூபாய் பரிசையும் அறிவித்திருக்கிறது என்ற செய்திதான் அது.

'கிட்டி' வெளியான போது அதைப் பற்றி நிறையப் பாராட்டுதல்கள் கூறப்பட்டன. 'கிட்டி' தொடரில் மூன்று நாவல்கள் இன்னும் எழுதப்பட வேண்டியுள்ளது. 'கிட்டி'யை அழகுற வெளியிடும் ஆதி பதிப்பக உரிமையாளர் திரு. பொன் சந்திர சேகரனுக்கும், அருமை நண்பர் திரு. ராகவராஜுக்கும் என் அன்பும் நன்றியும்.

– செ. யோகநாதன்

சென்னை – 24
27.12.94

# காட்டு வழிதனிலே....

பதினெட்டு ஆண்டு காலமாக என் மனதில் கனத்திருந்த இந்தக் கதையினை ஒரு முழுமையான நாவலாக எழுதி முடித்து உங்களின் கையிலே கொடுத்துள்ளேன். இந்த நாவலை எழுதி முடித்து, திரும்பவும் படித்துப் பார்க்கின்றபோதினிலே இன்னொரு முறை என்னால் இது போன்ற நாவலை இவ்வளவு உயிர்ப்புடனே எழுத முடியுமா என்ற சந்தேகமும் உண் டாகின்றது.

ஏனெனில் இவற்றை நான் உண்மை நிறைந்த வாழ் விலிருந்தே எடுத்துப் பதிவு செய்திருக்கின்றேன். இந்தக் கதை யிலே வரும் ஒவ்வொரு மனிதரும் உயிரானவர்கள். உண்மை யானவர்கள். நான் சந்தித்தவர்கள். என்னோடு பேசியவர்கள். பொழுதைக் கழித்தவர்கள். அப்பழுக்கற்றவர்கள். என்றும் மறக்க முடியாதவர்கள். காட்டு மலர்களைப் போன்ற சுபாவம் அவர்களின் சுயமானது.

இவர்களைப் பொறுத்த அளவிலே வெளியுலகம் இவர் களை எந்த வொரு விதத்திலும் வசீகரித்ததில்லை. ஆனால் இவர்களுக்கு வெளியே உள்ள உலகம் இவர்களுள் நுழைய விரும்புகிறது. தன்னிஷ்டத்துக்கு, தன் இலாபம் ஒன்றினுக்கு இவர்களை மாற்றவும் மயக்கவும் முயல்கிறது. அல்லல் படுத்துகிறது. ஆயினும் இவர்களை இவர்கள் இயல்பினது வேரிலிருந்து அறுத்தெறிய முடியுமென என்னாலே எண்ண முடியவில்லை. எனது அனுபவ சாராம்சம் இது தான்.

இவர்களின் குறுகிய உலகத்தினுள் மானிட நேயம் பலம் வாய்ந்ததொரு மரத்தின் கொடிபோலப் பின்னிப் பிணைந்து

முறுகியிருக்கிறது. இந்த நேயம் தன் சக மனிதனை மட்டுமல்ல, தன் பிரியமான பறவை, விலங்குகளை மட்டுமல்ல, தனக்கு உயிரூட்டுகிற செடிகளிலும் பரவியிருக்கிறது. தனக்கு நிழல் சொரிந்த பெருமர மொன்று அடி சரிந்து தலைமுறிந்த போது, இந்த மனிதன், இந்த மரத்தை தனது சகாவின் துன்பமாக மதித்துக் கண்ணீர் சொரிகின்றான். தனது உறவினன் இறந்து போனதாய் அவலமுறுகிறான்.

இலக்கியமென்பது வெறுமனே தனக்கு எதிரிலே நடந்த வற்றைப் பதிவு செய்கிற ஒன்று என்பதை நான் என்றுமே ஒப்புக் கொண்டதில்லை. அதற்கும் மேலாகப் போய் வாசகனது மனதில் ஒரு செய்தியை அல்லது செயலுக்கான ஊக்கத்தை அது பதிவு செய்தாக வேண்டும். நம்மில் பலருக்குத் துளிகூட அறிமுகமில்லாத இந்தக் காடும், செடி கொடிகளும், மனிதர்களும் நமக்கு எத்தனை மானிட உன்னதங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பாருங்கள்!

'கிட்டி'யில் நிறைய மரங்கள், செடி கொடிகள், மிருகங்கள், மனிதர்கள் வருகிறார்கள், ஆனால் நான் சொல்ல வந்த இவர்களின் கதையோ இன்னமும் சொல்லி முடியவில்லை. இன்னமும், இன்னமும் இருக்கிறது.

எனவே இந்த நாவலுக்கு இன்னொரு பாகமும் இருக்கிறது. இந்த மக்கள் சுரண்டப்படும் விதம் மனதை நெக்குருகச் செய் யும் மற்றொரு சோகக் கதை. இதை நான் வெகு விரைவிலே எழுதுவேன். அதை எழுதி முடித்தால்தான் இந்த நாவல் முற்றுப் பெற்றதென்று கொள்ள முடியும்.

**– செ. யோகநாதன்**

# 1

குும்முனைச் செடிகளுடே முறுகிக் கிடக்கின்ற கிளாச்செடி ஒன்றினை காட்டுக் கத்தியால் வெட்டிச் சரித்தாள் கிட்டி. கிளாக்கொடி நன்றாக முற்றியிருந்ததால் அதை வளைத்து சுருட்டுவது கஷ்டமாகத்தான் இருந்தது. மூச்சைப் பிடித்து அதை வளையமாகச் சுருட்டி, அதே கொடியில் உரித்த நாரினால் கிளாக்கொடியை அவள் இறுக்கிக் கட்டினாள்.

கறுவலும் முண்டனும் கிளாக் கொடியின் எதிரே பற்றையாய்க் கிடந்த வெள்ளெருக்கம் செடியின் ஓரமாக சோம்பலாக உட்கார்ந்திருந்தான். வெள்ளெருக்கம் செடிகளின் நடுவே குறிஞ்சாமரமொன்று திரண்டுபோய் கண்ணைக் குத்துகிற கபிலநிறத்தில் உயர்ந்து நின்றது. குறிஞ்சாமரத்தின் உச்சிக்கிளையில் பாயலாமா வேண்டாமா என்ற தயக்கத்தோடு இரண்டு மந்திக் குரங்குகள் ஒன்றையொன்று வாலை ஆட்டியபடி பார்த்துக் கொண்டிருந்தன.

சாய்ந்த பொழுதின் வெய்யில் அந்தப் பரட்டைக் காட்டில் சோர்வோடு விரிந்திருந்தது. பிச்சன் குளத்தின் சுற்றுப்புறமெங்கும் பரந்திருந்த மேய்ச்சல் தரையில் பட்டிமாடுகள் இரைமீட்டபடி படுத்திருந்தன. குளத்திற்கும் புல் தரைக்குமாக கொக்குகள் பறந்து போய்க் கொண்டிருந்தன.

பிச்சன்குளத்தின் இடப்புறமாக அடர்ந்த இலுப்பை மரங்கள். வெளவால்கள் இப்போதே கிறீச்சிடத் தொடங்கி விட்டன. இது இலுப்பைப் பழக்காலம். கண்ணாத்தையையும் உதுரனையும் இலுப்பைக் கொட்டைகளைப் பொறுக்குவதற்காக நாளைக் காலையிலேயே இந்தப் பக்கத்திற்கு அனுப்ப வேண்டுமென்று கிட்டி எண்ணிக் கொண்டாள். இலுப்பைக் கொட்டையிலிருந்து இப்போதே எண்ணெயை எடுத்து வைத்துக் கொண்டால்தான் மாரிகாலத்திலே விளக்கெரிக்கலாம், இலகுவாக அடுப்பையும் மூட்டலாம். கிட்டி, கிளாக்கொடி வளையத்தை பிரயத்தனத்துடன் தலையிலே மெல்ல ஏற்றிக் கொண்டாள். முரட்டுக் கொடி தலையில் அழுத்தி அமுக்கிறது.

கிட்டி நடக்கத் தொடங்கியதும், கறுவலும் முண்டனும் அவளைப் பின் தொடர்ந்தன.

பச்சைப்புல்லின் ஓரமாக பெருங்கோடைப் பூக்கள். விரித்த வெள்ளைச் சேலையாய் மண்டிக் கிடந்தன. பெரிய பெரிய வெள்ளைப்பூக்களின் மேலே கொத்துக் கொத்தாகப் பறக்கின்ற தும்பிகள்,• கறுப்பும் கடுமஞ்சள் வரிக்கோடுகளும் கொண்ட வண்ணத்துப்பூச்சிகள்,

திடீரென்று முண்டனும் கறுவலும் குரைக்கத் தொடங்கின. தலைச்சுமை அழுத்தத்தில் மெதுவாகப் போய்க் கொண்டிருந்த கிட்டி தலையைத் திருப்பாமலே, ''என்னடா அது?'' என்று சத்தமாகக் கேட்டாள்.

அதற்குப் பதிலளிப்பது போல கறுவலும் முண்டனும் முன்கால்களால் தரையைப் பிறாண்டிய படி பலமாகக்குரைத்தன. குரைத்துக் கொண்டே தரையை மூசி மூசி மோப்பமிட்டன.

அவற்றின் குரலுக்கான அர்த்தத்தை ஐயனைப் போலவே கிட்டியும் நுட்பமாக உணர்ந்து கொண்டு விடுவாள். அவள், பின்னே

திரும்பி கிளாக் கொடிச் சுமையை லாவகமாக புல்தரை ஓரமாக சாய்ந்து நின்ற பாலைமரத்தில் விழுத்தினாள்.

''என்ன மிறுகமடா அது....'' என்று அதட்டலாக கறுவலையும் முண்டனையும் பார்த்துக் கேட்டாள் கிட்டி. கேட்டவாறு அந்த வேட்டை நாய்கள் மோப்பமிட்டபடி குரைக்கும் அடிச்சுவட்டைப் பார்த்தாள் கிட்டி.

அவளின் முகம் மெல்ல மாறிற்று. குரலில் கலவரம் தொனிக்க அந்த அடிச்சுவட்டை உற்றுப் பார்த்தவாறு, ''கறடி வந்திருக்கு'' என்றாள். மறுகணமே நாய்களைப் பார்த்து. ''வாயைமூடுங்கடா'' என்றவாறே அந்த அடிச்சுவட்டைத் தொடர்ந்து கொஞ்சத்தூரம் கிட்டி சென்றாள். பாலைக்காட்டுப் பக்கம் வரையிலும் கரடியின் சுவடிகள் சென்று அருகம் புல்வெளியில் அடையாளம் கண்டு பிடிக்க முடியாமல் மங்கிப்போய் விட்டன.

''கிழட்டுக் கறடிதான் வந்திருக்கு, பாலைக் காட்டிலை தேனிருக்குமோ?'' என்று தனக்குத்தானே பேசிக்கொண்டாள் கிட்டி.

மௌனமாய் அவளைப் பின் தொடர்ந்த நாய்கள் இரண்டும் அவளின் வார்த்தையைக் கேட்டு அவளைச் சுற்றுச் சுற்றி வந்து மெல்லிய குரலோடு கிட்டியின் கால்களில் இழைந்தன.

''கறடி காட்டுக்குள்ளை போயிருக்கும். பொழுதும் படுகுது; படுவான் சரிய முதல் சேனைக்குப் போயிடணும்...'' என்று பரபரப்பாகக் கூறிய படிய பழைய இடத்திற்குத் திரும்பினாள் கிட்டி.

சரிந்த பாலையின் கீழ் பச்சையாயும் மஞ்சளாயும் முளைத்திருந்த பன்புற்களில் கொஞ்சமாக காட்டுக் கத்தியால் வெட்டியெடுத்து அதை லேசாக முறுக்கி சின்ன வளையமாக்கி தலையில் நன்கு பொருந்தும்படி வைத்தாள் கிட்டி. பின்னர் பாலைமரத்தில் அந்தரமாக வைத்திருந்த கிளாக்கொடி வளையத்தை எடுத்து லாவகமாக அவள் தலையிலே நேராக வைத்துக்

கொண்டாள்.

தூரத்தில் ''ம்ம்மா'' என்று மாடென்று உரத்துக் கத்தியது.

ஒற்றையடிப்பாதை வழியாக நடந்து சென்று கொண்டிருந்த கிட்டியின் மனம், கிழட்டுக்கரடியின் நினைவிலேயே ஆழ்ந்து போயிருந்தது.

பிச்சன் குளப்பக்கமாக எப்போதும் கரடிகள் வந்ததில்லை. அந்தப் பகுதியில் எப்போதுமே ஏதாவது நடமாட்டம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

காலடிச் சுவட்டைப் பார்த்தால் இந்தக் கிழட்டுக் கரடி நேற்று இரவு முழுவதுமே இந்தப் பகுதியில் உலவியிருக்கிறதென்பது கிட்டிக்குத் தெளிவாகவே தெரிந்தது. ஒற்றைபடிப் பாதையோரமாக அடர்ந்திருந்த இக்கீர்ச்செடிகளும், காவிழாக்களும் ஓரம் முறிந்து, சிதைந்து கசங்கியிருப்பதற்கும் கரடிதான் காரணமாயிருக்க வேண்டும். இடமும் வலமுமாக ஆடி அசைந்து நடப்பது கரடியின் சுபாவம். சிறிய செடிகளை முறித்து கசக்கியிருப்பதைப் பார்த்தால் கொழுத்த வயதான கரடியே உலவியிருக்கிற தென்பதை சேனையில் வாழ்கின்ற குழந்தையால் கூட சொல்லிவிடமுடியும்.

காலில் ஏதோ குத்தியதை உணர்ந்தாள் கிட்டி. தலைச்சுமையோடு முட்டுக்காலிட்டு குறிப்பினால் காலில் குத்திய முள்ளோடு எழுந்து நிமிர்ந்தாள் கிட்டி.

கையிலே சிக்கிய முள்ளை கண்ணெதிலே கொண்டு வந்தாள், கூர்மையான பன்றி முள்ளு.

''காட்டுப்பண்டியும் இந்தப்பக்கம் உலாவத் தொடங்கியிட்டுது'' என்று தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டாள் கிட்டி.

காட்டுப் பன்றியைப் பற்றிய நினைவோடு ஐயனின் முகமும் மனதிலே தோன்றிற்று. காட்டுப் பன்றியைப் பற்றி எண்ணியபோது

ஐயன் தனக்கு துவக்கு வேண்டும் என ஓயாமல் புலம்பிக் கொண்டிருப்பதுதான் கிட்டியின் நினைவிலே வரும்.

''பட்டங்கட்டியரை பிடிச்சால் உனக்கு அவர் துவக்கு வாங்கித் தரமாட்டாரோ?'' என்று ஐயனைப் பார்த்து பரிவு பொங்கக் கேட்பாள் கிட்டி.

ஐயன் மார்பில் சொறிந்தபடி அவளைப் பார்ப்பான். ''எத்தனை தரம் சொல்லியிட்டேன். அந்தக் காதாலை வாங்கி இந்தக் காதலாலை விட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று சலிப்புப் பொங்கக் கூறுவான் ஐயன்.

பின்னர் நெகிழ்வான குரலில், ''நாகசாமி தான் எனக்கு உதவி செய்ய வேணும்'' என்பான் ஐயன்.

துவக்கு ஒன்று கையிலிருக்குமானால் எவ்வளவு நல்லது. வேட்டைக்கு மட்டுமில்லாமல் பயிர்க்காவலுக்கும் அது பெருந்துணையாயிருக்கும். சேனையில் பயிர்பொலிந்திருக்கும் காலத்திலே ஒரு சத்தவெடி வைத்தால் எந்தக் குருவியோ மிருகமோ அந்தப் பக்கத்துக்கே வர மாட்டாது.

அந்தப் பகுதியிலேயே பட்டங்கட்டி ஒருவரிடம் தான் துவக்கு இருக்கிறது. அவர் எப்போதாவது ஒரு நாள்தான் துவக்கை எடுத்துக் கொண்டு பெரியகாட்டுக்குப் புறப்படுவார். அப்போது தவறாமல் ஐயனைத் தன் கூடவே அழைத்துச் செல்லுவார் பட்டங்கட்டி. அன்று இரவு காட்டிலே ஐயன் அலைந்துவிட்டு வந்தால் மறுநாள் முழுவதும் துவக்கைப் பற்றித்தான் பேச்சாயிருக்கும்.

சர்ரென்று அவளின் தலைச்சுமையை உரசிக்கொண்டு பறந்து சென்றது சிவப்புச் சொண்டன் குருவி. கிட்டியின் தலைச்சுமை இதனால் லேசாக ஆடிற்று. அவளுக்கு சட்டென்று கோபமுண்டாக ''தலையிலே சுமையில்லாம இருந்தா உன்னை எறிஞ்சு

விழுத்தியிருப்பன்'' என்று சத்தமாகக் கூறினாள். அவளுக்கு பதில் கூறி கேலி செய்கிறாற் போல் ''க்ளக் க்ளக்'' என்று வினோதமாக கத்திற்று சிவப்புச் சொண்டன் குருவி.

சேனை நிலம் கிட்டியின் கண்களில் தெரிந்தது. வாஞ்சையோடு கன்றுக்குட்டியைப் பார்க்கிறபசுவைப் போல, சோளனின் பிஞ்சுமடல்கள் செறிந்துள்ள அந்த சேனை நிலத்தை நோக்கினாள்கிட்டி. துளிர் மஞ்சள் நிறத்தில் சோளஞ் செடிகள் செம்மண் பரப்பை மூடி நிறைந்திருந்தன.

அடிவானம் வத்தகப்பழமாய் சிவந்து கொண்டிருந்தது. இதுவரை அவளின் பின்னாலேயே வந்து கொண்டிருந்த கறுவலும் முண்டனும் ஐயனின் காவல் கொட்டில் வந்ததும் அவளை முந்திக் கொண்டு முன்னே பாய்ந்து தமது வருகையைத் தெரிவிக்க சத்தமிட்டுக் குரைக்கத் தொடங்கின.

வாழைமரங்களுக்கு அதர் வெட்டிக்கொண்டிருந்த கண்ணாத்தை அவற்றின் அழைப்பை உடனேதெரிந்து கொண்டு சேனையின் வெளிப்பக்கத்துக்கு வந்தாள்.

கறுவல் அவளின் அருகே சென்று முன்னங்கால்களை உயர்த்தியவாறு குரைக்க, கண்ணாத்தை, ''சரி சரி...'' என்று அதட்டுகிற குரலிலே கூறினாள்.

## 2

அந்தக் கொழுத்த உடும்பு தன்னிடமிருந்து தப்பிப் போனது ஐயனுக்கு எல்லை மீறிய கவலையினைக் கொடுத்தது. மிகவும் கொழுத்த முற்றிய மரவள்ளிக் கிழங்கு போல உடல் திரண்ட நல்ல இரை.

காயான் மரத்துக்கு அருகே அந்த உடும்பினைக் கண்டதும்

கரும்பச்சைக் கொவ்வை இலைகள், அந்த மண்ணின் செழிப்பை அடையாளங் காட்டின. கொவ்வையின் அருகே சென்று அதன் மறுபுறத்தை எட்டிப் பார்த்தாள் கிட்டி, ஜிவ்வென்று மறுகணமே இரண்டு பச்சைக்கிளிகள் கொவ்வைச் செடியிலிருந்து பறந்து சென்றன.

கிட்டியின் முகத்தில் சந்தோஷம் பெருங்கோடைப் பூவென மலர்ந்தது.

மறுபுறத்தில் இலையை மூடிய செக்கச்செவேலென்ற கொவ்வைப் பழங்கள். உடும்பு ரத்தத்தை தெறித்து விட்டாற்போன்றிருந்தன அந்தப் பழங்கள்.

உதுரனுக்கு கொவவைப் பழங்களென்றால் போதும். சப்புக் கொட்டித்தின்பான். கொஞ்சமும் சலிப்பின்றித்தின்பான்.

கிட்டி கொவ்வைப் பழங்களைப் பறித்து, சுரைக் குடுவைக்குள் நிறைத்தாள். கொவ்வை இலைகளையும் பிடுங்கி குடுவையுள் திணித்தாள். கண்ணாத்தை தலை முழுக இது பயன்படும். தலைமுடிக்கு நல்லது. கண்ணுக்கும் குளிர்ச்சி தரும்.

ஒற்றையடிப் பாதையால் வேகமாக நடந்து வந்து கொண்டிருந்த கிட்டி தனக்கு குறுக்காக வேகமாகப் பறந்து சென்ற காட்டுக்கோழியைக் கண்டதும் புன்னகை செய்தாள். அவள் எதிர்பார்த்தது போலவே அந்தக் கோழியைத் துரத்திக் கொண்டு கறுப்புச் சேவல் ஒன்று சட்டென்று ஈச்சம் பற்றைக்குள் தாவிப் பாய்ந்தது.

''மனிஷரைப் போலதான் மிறுகங்களும்'' - தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள் கிட்டி. அப்போது காட்டுக் கோழியின் வீறிட்ட குரல் கெஞ்சுகிறாற்போல கிட்டியின் காதுகளில் விழுந்தது.

சட்டென்று மழைத்துளி, நிலத்தில் ஒற்றையாய் விழுந்தது. அபூர்வமாயிருந்தது அந்தத் துளியின் விழுகை. கிட்டி நிமிர்ந்து

வானத்தைப் பார்த்தாள். அவன் நின்ற நாவல் மரக்கிளைகளின் மேலே, வானம் பொட்டுப் பொட்டாயத் தெரிந்தது.

மழை பெய்யப் போகிறதென்றால் ஈசல்கள் கூட்டங் கூட்டமாகப் பறக்கும். ஆனால் இன்றோ ஒரு ஈசல்கூட கிட்டியின் கண்களிலே படவில்லை.

கிட்டிக்கு ஆச்சரியந் தாங்கவில்லை.

நிமிர்ந்து பார்த்தவளின் கண்களிலே இன்னொரு நீர்த்துளி. பிறகு சட்சட்டென்று சருகுகளில் சடசடத்தது மழை. அங்குமிங்குமாகத் தெறித்த சொட்டுகள் இப்போது இடர்ந்து நெருங்கி பிடிவாதமாக மழையாய் பொழியத் தொடங்கிற்று. கிட்டி நாவல் மரத்தோடு ஒட்டிக் கொண்டு நின்றாள்.

மழை பேரிரைச்சலோடு பெய்யத் தொடங்கிற்று. காடெங்கும் மழைநீரும் இலைகுழைகளும், சருகுகளும் கலந்த மணமொன்று மெல்ல மணக்கத் தொடங்கிற்று.

கிட்டியின் உடல் முற்றாகவே நனைந்து விட்டது. உடல் வெடவெட என்று நடுங்கத் தொடங்கிற்று. சருகுகளிலே மூடிய மழை நீரில் கால்கள் குளிர்தாங்காது விறைத்து விட்டன. காலை மாறி மாறி அவள் உரசிக் குளிரிலிருந்து விடுபடமுயன்றாள். பற்கள் கிடு கிடுத்தன.

''ம்ம்மே....''என்றொரு சத்தம், சோவென்ற மழையினைக் கீறிக்கொண்டு கேட்டது. அந்தத் தீனமான ஒலி கிட்டியின் நெஞ்சை அபயங்கோரிய குரலெனத் தொட்டது. அது ஒரு மானின் குரல். வெகுதூரத்திலிருந்து வந்த குரல் அல்லஅது என்பதை கிட்டி உடனே அறிந்து கொண்டாள். சுரைக்குடுவையை கையில் தூக்கிக் கொண்டே, குரல் வந்த திக்கைநோக்கி வேகமாகப் போனாள் கிட்டி.

ஒற்றையடிப் பாதையிலே விரைந்தவள், சடை விரித்த

ஆலமரத்தின் கீழே பார்த்தாள் ஆலமரவேர்ப்படுக்கையில் குட்டித் தாய்ச்சியான ஒருமான். அதன் எதிரே கொழுத்த நரி, இரத்தவெறிபிடித்த பற்கள் கோமாகத் தெரிந்திட....

பிரசவத்துக்கு அவதிப்படும் மானுக்கு ஒன்றுமே செய்யத் தோன்றிடவில்லை. சாதாரண நிலையிலாயின் அது துள்ளிப் பறந்தோடிவிடும். அதுவும் முடியா விடில் தன் கூரான கொம்பால் நரியோடு சண்டையிடத் தொடங்கிவிடும்.

இப்போது.........

நரிக்கு மனிதமணம் சட்டென்று புலனாயிற்று. உர்ரென்றவாறு கிட்டியைத் திரும்பிப் பார்த்தது. கால்களால் ஈரம் குழைத்த சருகுகளை பிறாண்டியவாறு அடிக்குரலில் நரி ஊளையிட்டது.

கடூரமான அந்த ஊளை, நான் எதற்கும் தயாரென்ற எச்சரிக்கை. ''இங்கிருந்து போய்விடு. என் வழியில் குறுக்கிடாமல் திரும்பு'' என்ற அபாய அறிவிப்பு.

மான், ''ம்ம்ம்மா....'' என்று அழுதது. பிரசவத்துக்கான நோவு, இப்படித்தான் சத்தமிடும்.

கறுவலும் முண்டனும் ஐயனோடு போய் விட்டன. காட்டுக் கத்தியை எடுத்து வரத்தோன்றவில்லை. இப்போது கையில் வெறும் சுரைக்குடுவை, தன்னையே நொந்து கொண்டான் அவள்.

கிட்டி, கண்களை சருகுகள் நிறைந்த தலையிலே மெல்லப் பரவவிட்டாள். நாவல் இலைச்சருகு, பாலை இலைச்சருகு, இக்கீரி இலைகள், எருமைச் சாணம், சின்னஞ் சின்னதாக நாவல்விதையிலேயே முளைத்த செடிகள், வெங்கிணாந்திப் பாம்புத்தோல்.... யானைத் தும்பிக்கைபோல வைரம் பாய்ந்த தேக்கங்கட்டை, கிட்டியின் மனம் சந்தோஷத்தால் சிலிர்த்தது. 'நாகசாமி நீ குடுத்திருக்கிற இந்த ஆயுதமே போதும்' என்றாள் மனது தளுதளுக்க. ஒரே பாய்ச்சலில் அந்தத் தேக்கங்கட்டையை

எடுக்க முடியுமென்று சொல்லிற்று மனம்.

முழுவலுவோடு அந்த இடத்திற்குப் பாய்ந்தாள் கிட்டி. கட்டையை கைகளால் கவ்வி எடுத்தவாறு ஆக்ரோஷமாக நிமிர்ந்தாள். கால்களை உறுதியாக ஊன்றியவாறு நரியைப் பார்த்தாள் கிட்டி.

''ச்ச்சூ..... ஓடு...''

நரி, கடவாயை விரித்து பற்களைக் காட்டி உறுமிற்று. நேருக்கு நேராய் பாய்ந்து குரல்வளையைக் கவ்வ அது தயாராகிவிட்டது. அதன் கண்கள் குரூரமாக மின்னின.

''ச்ச்சூ....''

தேக்கங்கட்டையின் அடிப்புறத்தில் இறுகப் பற்றியிருந்தன கிட்டியின் கைகள். உறுதியோடு நிலத்தை ஊன்றி நின்றன கால்கள்.

நரி, சட்டென்று பாயும், கண்மூடித்திறக்க முன்னரே அதன் பற்களும், நகங்களும் எதிரியின் உடலுள் சக்கென்று பாய்ந்து விடும்.

''ம்ம்ம்...'' என்று அதிர்ந்து அலறித் துடித்தது மான்.

கிட்டியின் அடிவயிற்றினுள் ஒரு சிசு புரண்டதை அவள் உணர்ந்தாள். அது தீனமாக அம்மாவென்று கெஞ்சியதை உணர்ந்தாள். சின்னச் சின்னக்கையால் மார்பு தடவி பாலுக்காய் அழுகிறாற்போல அவளின் உடலில் தாபமொன்று தீயெனப் படர்ந்ததை அந்த ஈனஸ்வரமான குரல் அவளிற்கு உறைக்கச் சொல்லிற்று.

மறுகணமே, முழுவேகத்தோடு, உடல்பலம் முழுதையும் கையிலேற்றி தேக்கங்கட்டையை ஒரே வீச்சில் குறிதவறாமல் நரியின் உச்சந்தலையில் பாய்ந்த வேகத்தில் இம்மியும் தவறாது ஒரே போடாகப் போட்டாள் கிட்டி.

''க்க்ம்...'' என்ற ஒலி நரியின் தொண்டையில் திணற,

சரி செய்வதாகவும் பட்டங்கட்டி சின்னையா ஏற்கனவே கூறியிருக்கிறார்.

ஐயன் சோளன் அளக்கிற் வேலையை சிறிது நிறுத்திவிட்டு, சடங்குக் கான ஏற்பாடுகள் செய்வதிலே மும்முரமாய் ஈடுபட்டிருந்தான். கிட்டி அவனுக்குப் பின்னாலேயே சிற்றெறும்பின் சுறுசுறுப்போடு அலைந்து கொண்டிருந்தாள்

தொலைவிலே பார்வை தரித்த பட்டங்கட்டி சின்னையாவின் வாய் அவரின் ஆனந்த பரவசத்தை வெளிப்படுத்திற்று. ''லொறி வந்திட்டுது.''

## 16

சின்னைச்சின்ன மஞ்சள் நிறமான வட்டுக்கத்தரிக் காய்களை, மெள்ள மெள்ளப் பிடுங்கிக் கொண்டிருந்தான் சுணங்கன். வட்டுக்கத்திரிச் செடியின் முட்கள் கையிலே குத்தாத வாறு வெகு கவனமாக அவன் காய்களைப் பிடுங்கிக் கொண்டிருந் தான். அக்காள் கண்ணாத்தைக்கு வட்டுக்கத்திரிக்காய்ப் பொரியலென்றால் மிகவும் விருப்பம். சுணங்கனுக்கு கூட அதன் மெது மெதுப்பும், புளிப்பும் மிகவும் பிடிக்கும்.

வட்டுக்கத்தரிக்காய் பிடுங்கிக் கொண்டிருக்கையிலே சர்சர் ரென்று ஏதோ பெருமூச்செறியும் சத்தம் கேட்டதும் திடுக்கிட் டான் சுணங்கன். பார்வைக்கு ஒன்றுமே தெரியவில்லை. காய் களை மடியில் அள்ளிக் கொண்டு எழுந்து நெருஞ்சிப் பற்றைகளை விலக்கியவாறே முன்னே நடந்தான் சுணங்கன்.

ஊமத்தம் பூக்கள் கசங்கிய நாற்றம் மூக்கைத் துளைத்தது. அந்த நாற்றம் வந்த திக்கில் அவனது பார்வை போயிற்று.

ஊமத்தஞ் செடிப் பற்றைக்குள்ளிலிருந்துதான் அந்தச் சத்தம் வந்தது. அந்தப் பற்றைக்குள்ளே ஏதோ மிருகங்கள் மூர்க்கமாக சண்டை போட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மோதலில்தான் ஊமத்தைச் செடிகளும் பூக்களும் கசங்கி முறிந்து நாறுகின்றன.

சுணங்கன் ஊமத்தைச் செடிப் பற்றைக்கு அருகே கிடந்த முதிரைக் கம்பொன்றை சத்தமின்றி எடுத்தான். பதுங்கிப் பதுங்கி ஊமத்தஞ் செடியின் மறுபுறமாகச் சென்றான்.

மறுபுறத்தில் கீரியும், பாம்பொன்றும் ஒன்றோடொன்று கோபத்தோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தது. கீரியைச் சுற்றி கழுத்தில் வளைத்துக் கொள்ள நாகப்பாம்பு முயன்று போராடிற்று. கீரியின் உடலெங்கும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. பாம்பு சீறிச் சீறி தலையை உயர்த்தியபோது கீரி கால்களை உயர்த்தி அதனை பிறாண்டிற்று. சற்று பின்னே போய்விட்டு மீண்டும் வேகமாக பாம்பின் கழுத்தை நோக்கிப் பாய்ந்தது. பாம்பு வாலைச் சுழற்றியபடி, கழுத்தை உயர்த்தி சக்கென்று கீரியின் வயிற்றில் கொத்திற்று. அந்தக் கணத்தை பயன்படுத்தி, கீரி பாம்பின் கழுத்தை அழுத்தமாக கவ்வி, பாம்பை சடசடவென்று கால்களில் போட்டு அடித்தது. கால்கள் பாம்பைக் கீறிற்று பாம்பு வசமாக அகப்பட்டு தப்பிப்பதற்காக வாலைச் சுழற்றி எகிறிற்று. முடிய வில்லை. கீரி, பற்களை அழுத்தி பாம்பின் கழுத்தை நறுக்கிற்று. கொளகொளவென்று கீரியின் வாயிலிருந்து இரத்தம் பொங்கிற்று 'க்க்ய்ங்ங்' என்ற பாம்பின் வீரிடலுடன் அதன் துடிப்பு அடங்கிற்று. கீரியின் பிடியும் மெல்ல மெல்லத் தளர்ந்தது. வயிற்றில் பெருகிய ரத்தத்துடன் அது பரிதாபமாக கால்களை விலுக் விலுக்கென்று உலுப்பியவாறு ஊமத்தஞ்செடி இலைகளில் சரிந்தது. தலையை மெல்ல உலுப்ப முயன்ற கீரி, ஈனஸ்வரமாக முனகியவாறே சட்டென்று தலைசரிய இறந்து போயிற்று.

சுணங்கன் கண்கள் விரிய கீரியையும் பாம்பையும் பார்த்துக் கொண்டே நின்றான். கையில் வைத்திருந்த முதிரங்கம்பைத்

தன்னையறியாமலே கீழே போட்டான் அவன். மெல்ல மெல்ல அவனுக்கு மனதினுள் அச்சம் தோன்றுவதை உணர்ந்தபடி இரத்த வெள்ளத்திலே கிடந்த பாம்பின் அருகே சென்றான்.

பாம்புகிடந்த இடத்திற்கு சற்றுத்தள்ளி உடைந்து போன நிலையிலே ஒரு முட்டை கிடந்தது. அதை விரல்களால் தொட்டுத் தூக்கினான். கரு, வழிய ஓடு பிசுபிசுத்தது. முட்டையை உற்றுப் பார்த்தான். பாம்பு முட்டை.

அந்த முட்டையை அப்படியே கீழே வைத்தான். கை பிசுபிசுத்தது. தலையிலே கையைத் துடைத்துக் கொண்டு பரிதாபமாக இறந்த கிடந்த பாம்பையே பார்த்துக் கொண்டிருந்தான். கண்களில் நீர் திரண்டது. அவனையறியாமலே பொல பொலவென்று கண்ணீர் வழிந்து கன்னங்களையும், நெஞ்சையும் நனைத்தது. விம்மி விம்மி அழத்தொடங்கினான்.

நாகசாமியை அவன் காப்பாற்றியிருக்கலாம். நிச்சயமாக காப்பாற்றியிருக்க வேண்டும். நாகசாமி தானே எல்லோரையும் பாதுகாக்கின்றவர். இந்த கொடியமிருகம் நாகசாமியின் முட்டைன்யயும் பாழ்படுத்தி அவரையும் கொன்று விட்டது. இதற்கு நிச்சயமாக நாகசாமி சுணங்கனைத் தண்டிக்கக் கூடும். மூக்கைச் சீறிக் கொண்டே விம்மிய சுணங்கன் கீழே போட்ட முதிரைக் கம்பை மீண்டும் கைகளில் தூக்கி இறந்து ரத்தவெள்ளத்திலே கிடந்த கீரியின் மீது சடசடவென்று ஆவேசமாக அடிக்கத் தொடங் கினான். வெகுநேரமாகியும் அவனது ஆவேசம் அடங்கவில்லை.

சுணங்கன் படுகின்ற அவஸ்தையைப் பாத்த கிட்டியின் கண்கள் கலங்கின. அவள் கண் கலங்குவதைப் பார்த்த பூவன் அவளின் அருகே வந்து பரிவோடு தோளிலே தொட்டான். கன்னத்தில் உருண்ட கண்ணீரைத் துடைத்துவிட்டு மௌனமாக அவளையே பார்த்தான் பூவன்.

''அண்ணைக்கு என்ன?''

பயமும், கெஞ்சுதலும் நிறைந்தன.

''வீட்ல யாருமில்லை. பசிக்குது அக்காள்....''

கிட்டியின் மனதுள் என்னவோ குத்திற்று. செஞ்சினில் வேதனை மெது மெதுவாக அடைந்தது. வாஞ்சையோடு வட்டியின் தோளில் கை வைத்து உள்ளே கூட்டிச் சென்றாள்.

மரவெள்ளிக்கிழங்கு அவித்துவைத்திருந்த மண்குண்டானைத் திறந்து பார்த்தாள் கிட்டி. நாலைந்து துண்டு கிழங்குகள் கிடந்தன. அதை மண்சட்டியில் போட்டு, இரண்டு பச்சை மிளகாயுடன் வட்டியிடம் கொடுத்தாள். அடுப்போரமாக வைக்கப்பட்டிருந்த நன்கு பழுத்த பப்பாளிப் பழமொன்றை எடுத்து, அதை மேல் புறத்தால் வட்டமாக வெட்டி பாலை அழுத்தித் துடைத்து, மேல் பகுதியை ஓர மாகப் போட்டு, பப்பாளிப் பழத்தை குறுக்காக நான்கு துண்டு களாக்கி, கத்திமுனையால் பப்பாளி விதைகளை அகற்றியபின் அந்தப் பழத்துண்டுகளை வட்டி வைத்திருந்த மண்சட்டியில் போட்டாள் கிட்டி.

வட்டி 'அவுக் அவுக்' கென்று மரவெள்ளிக்கிழங்கைத் தின்று கொண்டிருந்தாள்.

''உனக்கு இவ்வளவு பசியோ? ஏன் வீட்ல சோளம் பருப்புக் கூட இல்லையோ?'' என்று இரக்கமான குரலிலே வட்டியைப் பார்த்துக் கேட்டாள் கிட்டி.

பப்பாளிப் பழத்துண்டை கையில் எடுத்தபடி அவளைப் பார்த்தாள் வட்டி. ''ஒரு மணிசோளம்கூட இல்லாமல் லொக்காறங்களுக்கு வித்திட்டாங்க. அடுத்த பயிருக்கும் இல்லை...''

''விதைக்கும் எடுத்து வைக்கலையா?''

''இல்லை...''

''அப்போ மாரிக்கு என்ன செய்வாங்க...''

''தெரியல்லை அக்காள்....''

சட்டியைக் கழுவிவைத்துவிட்டு, ''நான் போறன்'' என்று வட்டியிடம், ''இந்தா இதையும் கொண்டு போ.....'' என்று ஒரு பெரிய பப்பாளிப் பழத்தைக் கொடுத்தாள் கிட்டி.

வட்டி சந்தோஷமாக அதை வாங்கிக் கொண்டு வெளியே போனாள்.

சுணங்கனுக்கு பக்கத்திலே வந்து உட்கார்ந்து கிட்டி, அவன் அமைதி யாகத் தூங்குவதைப் பார்த்து நிம்மதியடைந்தாள்.

அப்போது கண்ணாத்தை உதுரனுடன் அங்கே வந்தாள்.

## 17

கிட்டியின் மனதினுள்ளே பொங்கிய ஆனந்தத்திற்கு அளவு கணக்கே இல்லை. கண்ணாத்தை அந்தப் புதிய ஆடைகளினுள் சூரிய காந்திப் பூவைப் போல மலர்ந்து சிரித்தாள். அவளது எல்லாப் பிள்ளைகளும் ஒரே நேரத்தில் புத்தம்புதிய ஆடைகளணிந்து தோன்றியது இன்றைக்குத்தான் முதற்தடவை. புத்தாடைகளை அணிந்து அவர்கள் ஆனந்தமாக நாகசாமி கல்லடிக்குப் புறப்பட்டுப் போனதை பூரிப்போடு பார்த்தபடி நின்றான் ஐயன். கிட்டியும் அவன் பின்னே நின்றாள்.

உலுப்பிக் கொண்டே உறுமிற்று. ஐயன் குபுக்கென்று பாய்ந்து அதன் கழுத்திலே பதித்திருந்த கத்திப் பிடியைப் பிடித்து பலங்கொண்ட மட்டும் இழுத்தான். இரத்தம் சுர்ரென்று சீறியடித்தது. பன்றி விலுக் விலுக்கென்று உடம்பை உலுப்பிக் கொண்டே அதிர்ந்து உறுமிற்று. கடைசித் தடவையாய் ஐயன் பிடியை அசைத்துவிட்டு ஒரே இழுவையாக இழுத்தான். கத்தி வெளியே வந்து விட்டது.

பன்றி 'ஊர்ர்ர்' என்றவாறே மூச்சிழந்து போறிற்று.

எல்லாமாக மூன்று பன்றிகளை அவர்கள் வேட்டையாடி விட்டனர். இருவருக்கும் உடலெல்லாம் நல்ல சிராய்ப்பு. முண்டனுக்கு இடது கண்ணில் பன்றி முள்ளு ஏறி, அது அனுங்கிக் கொண்டிருந்தது. ஐயனுக்கு முதுகெங்கும் இலேசான சிராய்ப்பு. நாரியும் விண்விண்ணென வலித்துக் கொண்டிருந்தது.

## 21

விடிகாலையில் திடீரென்று தூக்கத்திலிருந்து திடுக்கிட்டெழுந் தாள் கிட்டி, மயில் ஒன்று அடிக்குரலில் அகவும் சத்தம் பக்கத்திலேயே கேட்டது. எழுந்து வெளியே வந்தாள். வானம் கருத்துக் கிடந்தது குளிர் காற்று ஜில்லென்று வீசிற்று. ஈரம் உடலில் பூசினாற் போன்ற குளிர் காற்று, குருத்தெலும்புகளும் நடுங்கின. மயிலின் அகவுதலோடு குயிலின் கூவலும் இப்போது சேர்ந்து விட்டது. கிட்டி முந்தானையை தோளில் நன்றாகச் சுற்றி இறுக்கிக் கொண்டாள். ''மயிலும் குயிலும் கத்துது, மழை வரப் போகுது'' என்று தனக்குள்ளே சொன்னவள், யாருக்கோ பதில் கூறுபவளைப் போல, ''இப்போதைக்கு மழை பெய்யிறது நல்லதுக்குதான்'' என்றாள். சற்றுத் தள்ளி நின்ற முல்லைமரத்தடியிலிருந்து பூ வாசனை குளிர் காற்றோடு கமழ்ந்து வந்தது. மரத்தடியில் நின்ற படியே மையாய் மூடிய இருளினுள் கலங்கலாகத் தெரிந்த தனது

சேனையையே பார்த்துக் கொண்டு நின்றாள் கிட்டி. இந்தச் சேனைக்கு பின்புறமாக உள்ள நிலத்தில் கொஞ்சத்தை வெட்டிச் சரிப்பண்ண வேண்டும் என்று ஐயன் சொல்லிக் கொண்டிருந்தான். நல்ல கருமண் அது. கையில் அள்ளிப் பார்க்கிறபோது அதன் மணத்திலேயே செழிப்புத் தெரிந்து விடுகிறது. ஐயைக் கிழவிகூட அந்நிலத்தைப் பற்றி கிட்டியிடம் கதை கதையாகச் சொல்லி இருக்கிறாள்.

அந்த மண்மேட்டிலே பழைய காலத்திலே அழகிய நந்தவனம் ஒன்று இருந்ததாம். விதம் விதமான பூக்களும் அழகிய குளமும் அந்த நந்தவனத்தை கண்கொள்ளா அழகோடு வைத்திருந்தனவாம். அதைக் கண்டு ஒருநாள் அந்த நந்தவனத்துக்கு வந்தார்களாம். அப்போது நல்ல நிலவு காலம். நந்தவனத்தில் உட்கார்ந்து அவர்கள் இருவரும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். பார்வதிதேவி தான் நன்றாக விளையாடினாள். சிவபெருமானுக்கும் அது சந்தோஷமாயிற்று. அந்த சந்தோஷத்திலே தாங்கள் இருந்து விளையாடிய அந்த நந்தவனம் எப்போதும் செழிப்புடன் இருக்கும் என்று சொன்னாராம் சிவபெருமான்.

''சிவபெருமான் எப்படி இருப்பார்?'' என்று கிட்டி ஒரு நாள் ஐயைக் கிழவியிடம் கேட்டாள், ஐயைக்கிழவி''சிவபெருமான் எங்க ஜாதிதான், வேட்டையிலை அவர் சிங்கம். எப்பவும் சந்தோஷமாயிருப்பார். பெண்சாதியிலை அவரை மர்திரி ஆசையுள்ள ஆம்பிளை வேறை ஆரும் இல்லையாம்.'' என்று சொன்னாள். சொல்லிவிட்டு முகம் மலர, ''ஐயனைப் போலைதான் சிவபெருமானும் இருப்பார்'' என்றாள்.

அதைக் கேட்ட கிட்டிக்கு உடலெல்லாம் சிலிர்த்தது. பரவசத்தால் முகம் முல்லைப் பூவாய் மலர்ந்தது. மௌனமாக ஐயைக்கிழவியையோ அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஐயனைப்போலமனுஷன் குருவிக்கல்லிலை வேறை ஆரு.

மாடுமாதிரி வேலை செய்வான். உடும்பு ம்ாதிரி வலுவான ஆள். உனக்கு அவன் என்ன குறையை வைச்சான், சொல்லு?''

ஐயைக் கிழவி சொல்லியவாறே, கிட்டியின் தோளைத் தொட்டாள். கிட்டியின் கண்கள் சட்டென்று பனித்தன. ஆனால் அவளால் எதுவுமே பேச முடியவில்லை. மனம் தளதளத்தது. தொண்டையை அடைத்தது. ஐயைக் கிழவி சொல்வதில் கொஞ்சமும் பொய்யில்லை. ஐயனைப் பற்றி அவள் சொல்வதெல்லொம் உண்மை. ஐயன் சிங்கம் மட்டுமல்ல. உடும்பு மட்டுமல்ல, பிடிவாதமுள்ள கரடியும் கூட.

கிட்டி தன்னை மீறிச் சிரித்தாள்.

ஐயைக் கிழவி, கிட்டியின் கன்னத்தில் கிள்ளினாள்: ''என்னடி அது கள்ளச் சிரிப்பு?''

கிட்டி ஒன்றும் பேசாமல், ''உனக்கு போயிலை வேணுமா?'' என்று ஐயைக் கிழவிடம் கேட்டாள்.

ஐயைக் கிழவி அவளது தோளில் இடித்தபடி, ''கேட்டதுக்கு மறுமொழி சொல்லடி'' என்றாள். பின்னர், தானே ''புருஷனை நினைச்சியோடி பூசணிக்காய் கட்டி'' என்று கனிவாகவே சொன்னாள் ஐயை.

திடீரென்று சேனையின் ஒற்றையடி வழியில் ஏதோ சத்தம் கேட்டது. கிட்டி பழைய நினைவுகளிலிருந்து தன்னை உதறி யெறிந்தவாறு ஒற்றையடி வழிப் பக்கமாக விரைந்தாள்.

யாரோ அவசரமாக ஓடுவது தெரிந்தது. மெல்லிய வெளிச் சத்தில் இரண்டு பேர் ஓடுவது தெரிந்தது. ஆணும் பெண்ணுமாக.

கிட்டியின் மனதில் சட்டென்று சந்தேகம் பொறியாக விழுந்தது. தாமதியாமல் அவர்களைப் பின் தொடர்ந்து ஓடினாள் கிட்டி.

முன்னாலே போனவர்கள் அரவங் கேட்டதும் மேலும் வேகமாக ஓடினார்கள். நாகலிங்க மரத்தடியில் இரட்டை வழி

இருந்தது. அதில் அவர்கள் இருவரும் பிரிந்துபோய் ஓடினார்கள். கிட்டி திகைத்துப் போனாள். மறுகணம் அந்தப் பெண்ணைத் தொடர்ந்தாள்.

கொஞ்ச நேரத்தில் அந்தப் பெண்ணின் தலைமுடியில் எட்டிப் பிடித்தாள் கிட்டி.

அது கனகி, மூத்தானின் மகள்.

கிட்டி, கனகியின் முடியை உலுப்பினபடி கேட்டாள் ''ஆரடி அவன்?''

கனகி அதிர்ந்து போய் நின்றாள்.

''ஆரடி..... சொல்லு....?''

கனகி மௌனமாய் அழுதாள்.

''கொழுத்த பண்டி அலையிற் மாதிரி இந்த வயதிலை புருஷனைத் தேடி அலையிறியோடி.....''

''ஆரு. சொல்லாட்டில் கோழி உரிக்கிற மாதிரி உரிச்சிடுவேன்.''

சத்தமாகக் கத்தினாள் கிட்டி. கனகி பரிதாபமாக அழுதாள். பார்க்க கிட்டிக்கு இரக்கமாயிற்று. முடியில் பிடித்திருந்த பிடியைத் தளர்த்தியவாறு பரிவோடு கனகியின் தோளில் கைவைத்தாள். கனகிக்கும் கண்ணாத்தைக்கும் ஒரு வயதுதான் இருக்கும். கனகி தினவெடுத்த காட்டுக் கோழி போல இருப்பாளென்று யாரும் நம்பமாட்டார்கள்.

''சொல்லு ஆரவன்? அவனுக்கு உன்னை நானே சோறு கொடுக்க சொல்லுறன்....'' என்று இரக்கம் மேலிடக் கேட்டாள் கிட்டி.

கனகி அச்சத்தோடு அவளைப் பார்த்தவாறு நாக்குழற ''முத்தன்'' என்று கூறி, விட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

அங்கிருந்த எல்லோருக்கும் பழக்கமாகிவிட்டது. முண்டனும் கறுவலுங்கூட அந்தமான் குட்டியைச் சுற்றி வந்து விளையாடிக் கொண்டிருந்தன.

மான்குட்டிக்கு அறுகம் புல்லைன்றால் நன்றாகப் பிடிக்கும். பிச்சன் குளத்தின் மேற்குப் பக்கம் கொய்யாப் பற்றைகளை அடுத்து நீண்ட தரையிலே செறிந்திருந்தது அந்தப் பெரிய நீண்ட பசுமையான புல்தரை. அந்தப் புல்தரைப்பக்கம் சென்றால் அறுகம்புற்களின் மெல்லிய நறுமணம் மூக்கைத் துளைக்கும். இனந் தெரியாத சந்தோஷத்தில் மனதினைத் திளைக்கச் செய்யும். அந்த இடத்தின் எளிமையூம், அமைதியும் எந்தச் சஞ்சலமடைந்த மனிதனையும் குணந் தெளிவு பெறச் செய்யும். புத்துணர்வைக் கொடுக்கும். உற்சாகத்தை அளிக்கும். அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்கு மானியையும் தூக்கிக் கொண்டு வந்தாள் கண்ணாத்தை.

குடிசையுள்ளே கிட்டி, ஐயனுக்கு தொண்டையில் மருந்து பூசிக் கொண்டிருந்தாள். ஐயனுக்கு ஒரு வாரமாக தொண்டை அடைத்து நன்றாகப் பேச முடியாமல் அவதிப் பட்டுக் கொண்டிருந்தான். மாரியான் அதற்கு ஒரு வைத்தியம் சொன்னான். ''அக்காள், வேட்டைக்காரனுக்கு இது ஒரு நோயே இல்லை. முருக்க மிலையிலை கொஞ்சத்தை எடுத்து சாறு பிழிஞ்சு கொள். சாற்றுலை இல்லிப் போலை சுண்ணாம்பை கலந்து அந்தச் சாறை அண்ணை யின்ரை நெஞ்சிலையும் தொண்டைப்பக்கமாகவும் பூசி விடு. பிறகு பார். எல்லாம் மாறிப் போய்விடும்.'' மாரியான் மிகவும் உறுதியான குரலிலே அவளுக்கு கூறினான். பரம்பரை பரம்பரையாக வைத்தியத்தில் பேர் போனவர் மாரியானின் தந்தை. குளம்புகள், மருந்துகள், செய்வினை, சூனியம் எல்லாம் செய்வதிலே வல்லவர். தண்ணீரும் ஓதிக்கொடுத்து மந்திரத்தால் ஆட்களை நோய் மாற்றியவார். இப்போது அவருக்கு வயதாகி விட்டது. அவர் சொல்லச்சொல்ல மாரியன் மருந்துகள் தயாரிப்பான்.

''ஏனய்யா அழுகிறாய்?'' கிட்டி அவனது நெற்றியில் கைவைத்து மெல்ல வருடினாள்.

''ஏனய்யா?''

அந்த வார்த்தையின் பரிவு தனது இதயத்தை சூரியகாந்திப் பூக் கொண்டு வருடினாற் போல உணர்ந்த ஐயன், மறுகணமே தளதளத்தான்; ''கிட்டி, உனக்கு முந்தி நான் சாக வேணும்.''

கிட்டி அவனது நெற்றியைப் பிடித்து உலுக்கினாள். முகம் மலர்ந்த புன்னகையோடு, ''ஏனய்யா குழந்தை போலை இப்பிடி அடிக்கடி பேசிறாய்.'' என்றாள் கடிந்த குரலிலே

''சாகிறது நம்முடைய கையிலையை இருக்கு. அது நாகசாமியோட வேலை'' என்றாள் வெளியே பார்த்தபடியே கிட்டி. பின்னர் தணிந்த குரலில், ''பாரையா, மானிக்கு சோறு குடுக்கிற வரை நீயும் நானும் சாகாம இருக்கவேணும். ஐயைக் கிழவி இருக்கிறா. நாங்க ரெண்டு பேரும் இருக்கவா மாட்டம்? சொல்லு....'' என்றாள் கிட்டி.

ஐயன் மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சொல்ல மாட்டியா?''

அவள் அதட்டுகிற குரலிலே கேட்டாள்.

ஐயனின் குரல் தயங்கிற்று.

''ரெண்டு பேருமே இருப்பம்'' என்றான் ஐயன் அடங்கிய குரலில்.

''ம்ம்ம்மா...'' என்று அழுதுகொண்டிருந்த மானியை உள்ளே கொண்டு வந்தாள் கண்ணாத்தை. கிட்டி எழுந்து குழந்தையை வாங்கிக் கொண்டாள். பிறகு ஐயனுக்கு அருகே உட்கார்ந்து மானிக்குப் பாலூட்டத் தொடங்கினாள்.

நாய்க் குட்டியள் தந்திடுவார்....''

''நான் நாளைக்கே குழிமுயல் பிடிச்சிடுவன் அக்காள்....''

உற்சாகம் மேலிடக் கூறினாள் உம்மிணி.

கண்ணாத்தை அலட்சியமாகச் சிரித்தாள்.

''என்ன அக்காள் ஏன் சிரிக்கிறாய்?

ஆர்வமும் தயக்கமும் நிறைந்த குரலிலே கேட்டாள் உம்மிணி. உம்மிணியின் தலையை செல்லமாக உலுப்பினாள் கண்ணாத்தை.

''யோசிக்காமல் பேசாதையடி. காட்டுப் பூனை மாதிரி நீ வளர்ந்தாலும் எலிக்குஞ்சு மாதிரிப் பேசுகிறாய்''

''ஏன் அக்காள்?'' -உம்மிணியின் குரலில் கெஞ்சுதல்.

''நிலவு காலத்திலை எங்கையாவது குழிமுயல் பிடிக்கலாமாடி?''

உம்மிணி நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''சரிதான் அக்காள்.'

''குழிமுயலைப் பிடிக்கிறது இடக்கலானதடி. அதுக்கு காது சரியான கூர்மை. சருகு விழுகிறது கூட அதுக்குத் தெரியும். பற்றைப் பக்கமாய் அதை ஒரு நாளுங்கலைச்சுப் பிடிக்கேலாது... அதை மேட்டிலையிருந்து பள்ளத்துக்கு நாயைவிட்டுக் கலைக்க வேணும் வேகமான மிருகம்''

கண்ணாத்தையின் கண்களிலே, இப்போது அவளை அறியாத பரவசம். வேட்டையைப் பற்றி நினைக்கின்ற போது மிதமிஞ்சிய சந்தோஷம். அவளினுள்ளே பொங்கிப் பிரவசிக்கும். அவளே காட்டுக்கத்தியோடு நிற்கிறாற் போல களிப்போடு நிற்பாள்.

''ஆனால் எந்தப் பொழுதாயினும் சினைப்பட்ட மிருகத்தைக்

முணுமுணுத்துக் கூறிய உதுரன் பின்னர் உரத்துச் சத்தமிட்டு விண்ணனை அழைத்தான்.

கோவணத்தை இறுக்கிக் கட்டியவாறே அவன் நின்ற பக்கமாக வந்த விண்ணன். உதுரனைக் கேள்வியான முகத்தோடு ஏறிட்டான். உதுரன் தலையைச் சரித்தவாறு கூறினான்.

''விண்ணா, இந்தப் பக்கம் நல்லாக மரை மேயுதடா....''

விண்ணனின் முகத்தில் சந்தோஷம் பூத்தது. குரலில் உற்சாகம்!

''அண்ணா டே. அக்காளுக்கு மரைவத்தல் என்றால் நல்ல விருப்பமடா. ஒரு மரைப் பிள்ளையரை பிடிப்பமா?....''

உதுரன் தலையைச் சொறிந்தவாறு யோசித்தான். பின்னர் மூக்கைச் சுரண்டியபடியே எதிரே நின்ற கும்மிழாக்குச் செடியைப் பார்த்து விட்டு கையை ஒரு மாதிரி வீசினான்.

''நீ சொல்லுறது சரிதான். ஆனால் நானும் நீயும் சம்பன் அண்ணனும் சேர்ந்து மரைவேட்டையாடுவமடா. மரை வேட்டைக்கு நல்ல பலப்பான கயிறும் காட்டுக் கத்தியும் அல்லவோ தேவைப் படும்? அதை உடனை தேட வேணுமடா. ஆனால் குட்டியோடை வாற மரையை ஒண்டும் செய்யப்படாது, அது பாவம்.''

விண்ணன் பதிலேதும் கூறாமலே தலையை அசைத்தான். ஏதாவது சொல்லிவிட்டால் போதும் அவனுக்கு அதைத் தவிர வேறெந்த நினைவும் இல்லாது போய்விடும்.

''உனக்கு மரை பிடிக்கும் வரையிலும் இனிப் பசியும் வராது'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான் உதுரன்.

''அக்காளுக்கு வேறையும் என்ன வெண்டாலும் செய்ய வேணும்.''

சொல்லியவாறே அவனைப் பார்த்தான் விண்ணன்.

''என்ன செய்யலாமெண்டு யோசி.''

''அடிக்காட்டுக்குள்ளை வெள்ளாப்போடை எழுப்பு போய்ப் பார்க்க வேணும். நாளைக்கு ஆகட்டும்.''

''நானும் வாறன்....''

''ஆருக்கும் பறையாமல் போக வேணும்....''

''அது நல்லதுதான்''

## 27

இலுப்பைப் பூக்கள் இம்முறை மரத்தை மூடிக்கிடந்தது கண்ணாத்தைக்கும் கிட்டிக்கும் தாங்க முடியாத சந்தோஷத் தினை அளித்தது. இலுப்பைப் பூக்களைச் சமைத்துச் சாப்பிடுவதில் கிட்டிக்கு மிகவும் பிரியம். அந்த ருசியை அவள் அடிக்கடி சப்புக் கொட்டிக் கொள்வாள்.

நெருப்பெரியும் கோடையில் இலுப்பை மரம் பூக்கத் தொடங்கி விடும். இலுப்பை மரத்தை இவ்வேளையில் பூக்க வைப்பவர் நாக சாமியே என்று ஐயை அடிக்கடி கூறுவாள். இலுப்பை, பூத்துச் சொரியத் தொடங்கியதும் பின்னங்காடெங்கும் குருவிக் கல்லுக் கிராமமே திரண்டு போய்விடும்.

பூக்களை இலகுவில் பொறுக்குவதற்காக கிட்டி இலுப்பை மரத்தின் அடிப்புறத்தைச் சுற்றிய வட்டமான பிரதேசத்தில் நெருப்பு வைத்துக் கொழுத்திவிட்டாள். இக்கீரி, நெருஞ்சி போன்ற சிறு முட் களும் சுக்கான் என்று பெரிய விஷ முட்களும் இந்தத் தீயிலே கருகிப் பொசுங்கி சாம்பலாகப் போய்விடும். அந்தச் சாம்பல் முழுவதையும் உதுரனே கூட்டிப் பெருக்கி ஒதுக்கி விட்டான்.

இலுப்பை மரம் வழமை போலவே பதினைந்து நாட்களுக்குப் பூவாய்ச் சொரிந்து தள்ளிற்று. வெள்ளை வெளேரென்று நறுமணங் கமழும் இனிய சுவை கொண்டவை அந்தப் பூக்கள். இலுப்பை மரம் உள்ள இடத்தைச் சுற்றிலும் மனதை மயக்கியவாறு வீசும் அந்த வாசனை; அதை நெடுநேரமாக நின்று அனுபவிக்க யாருக்குத்தான் மனம் வராது போய்விடும்?

இலுப்பை மரப் பூக்களின் வாசனை மனிதரை மட்டுந்தானா மயக்குகிறது?

கரடிக்கும் இலுப்பைப் பூ என்றால் கொள்ளை விருப்பம். தேன் கூட்டைப் போலவே முகர்ந்து முகர்ந்து அது இலுப்பைப் பூக்களைத் தேடி அலையும். இரவிலேயே இலுப்பைப் பூக்களை பூக்கத் தொடங்கிவிடும். அப்போதே வாசனை காடெங்கும் கமகமக்கத் தொடங்கிவிடும். கரடி உடனேயே சுறுசுறுப்பாகிவிடும். வாசனையை முகர்ந்து கொண்டே இலுப்பை மரத்தின் அடிப்புறத்திலே போய் மனிதரைப் போலவே சாய்ந்து உட்கார்ந்து கொள்ளும்.

விடியும் போது இலுப்பைப் பூக்கள் கொத்துக் கொத்தாகச் சொரியும். கொஞ்சப் பூக்கள் சொரியும் வரை கரடி அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கும். பின்னர் பூக்களை அள்ளி அள்ளி வாய்க்குள் அதக்கிக் கொண்டே கரடி தின்னத் தொடங்கிவிடும்.

கிட்டிக்கு அந்தக் காட்சியை நினைத்ததும் சிரிப்புப் பொங்கிக் கொண்டு வந்தது. கனவுக்கும் நனைவிற்கும் இடைப்பட்ட நிலையிலே அவள் சடக்கென்று திடுக்கிட்டெழுந்தாள்.

இலுப்பை மரங்களைச் சுற்றி தீப்பந்தங்கள் இப்போதும் எரிந்து கொண்டிருந்தன. மரங்களின் அடியிலும், ஒதுக்குகளிலும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தன்னிலை மறந்து தூங்கிக் கொண்டிருந்தனர். பொழுது விடிந்ததும் குழந்தைகள் இந்தப் பூக்களையெல்லாம் கூட்டிப் பெருக்கி அள்ளி கோணிச்சாக்கு களிலும் கூடைகளிலும் நிறைத்துவிடுவார்கள்.

அடிவானத்தில் கோதுமை மஞ்சள், வரிவரியாகப் பூசியிருந்தது.

கிட்டி உற்றுப்பார்த்தாள். கிழக்கு மூலைவெளிச்சத்தில் கன்னங் கரேலென்று உருவமொன்று விண்ணாங்கள் தடியில் கட்டப் பட்டிருந்த தீப்பந்தத்தை மெல்ல மெல்ல உசுப்பித்தள்ளிக் கொண்டிருந்தது.

கிட்டி அந்தப் பொதபொதத்த உருவத்தை உற்று நோக்கினாள். அது நன்றாகக் கொழுத்துப்போன முழுக்கரடி. இப்போது அந்தக் கரடி தீப்பந்தத்தைப் பிடுங்கிக் கொண்டு மெல்ல மெல்ல முன்னே வந்து கொண்டிருந்தது.

கரடிக்கு விஷமம் உண்டானால் அது மிகக் கொடூரமாகச் சண்டை போடும். வெய்யிற்கால வெம்மை பொதுவாகவே கரடிகளுக்கு விஷமத்தை உண்டாக்கிக் கிளர்ச்சியையூட்டுமென்று கிளியன் கூறி யிருக்கிறான். கிளியன் என்பவன் ஓயாமலே காடலைபவன்.

கிட்டி கொஞ்சமும் தாமதிக்கவில்லை. மறுகணமே ''அடடே கரடி வந்திட்டுது எழும்புங்கோடா எழும்புங்கோடா.'' என்று அவள் உரத்த குரலிலே சத்தம் போடத் தொடங்கினாள். அவளின் சத்தம் அந்தக் காட்டையே அதிர வைத்தது. உலுப்பி உதறிற்று.

வைரவன்தான் முதலிலே நித்திரையிலிருந்து திடுக்கிட்டு எழுந்தான். திடுக்கிட்டெழுந்தவனின் கண்களில் எதிரே ஆக்ரோஷமாக நின்றது அந்தக் கரடி.

''ம்ம்றுறுறாறு'' என்று பெரிய தீப்பந்தை சுழற்றியவாறு உறுமிற்று அது.

வைரவன் கண்ணிமைக்கும்பொழுதிலே தனக்குப் பக்கத்திலிருந்து காட்டுக் கத்தியை லாவகமாக எடுத்துக் கொண்டான். அதே வேகத்தில் உறுதியாகக் கால்களை நிலத்தில் ஊன்றியபடி கரடியின் கழுத்துப் பக்கமாகப் பாய்ந்தான் அவன்.

பாய்ந்த வேகத்தில் கரடியின் கழுத்துப் பக்கத்தில் சதக்கென்று கத்தியை அழுத்தினான். ரத்தம் புது ஊற்றாய் வேகமாய்ச் சீறியடித்தது. கத்தியை அதே வேகத்தில் வெளியே இழுத்தான். இதை எதிர்பாராத கரடி வலியும் கோபமும் தாங்காமல் காலை உதறியவாறு அவனை நோக்கி மேலும் வலுவோடு பாய்ந்தது. கையை அடித்துக்கொண்டு ஓங்கி உறுமிற்று. முன் காலால் அவனை அறைந்தது. மின்னலாய் அவன் இடப்புறமாய் நழுவிக் கீழே சரிந்து அதன் அடிவயிற்றில் சக்கென்று மீண்டும் கத்தியின் கூர்முனையைக் குத்திப் பாய்ச்சினான். பொறி கலங்கிய கரடி செய்வதறியாமல் மல்லாக்காகச் சரிந்தது. சரிந்து விழ்ந்தது. வீழ்ந்த அதிர்ச்சியும் கால்களின் வலியும் அதனை நிமிர்ந்தெழவிடவில்லை. எனினும் ஒற்றைக் காலை உதறிக் கொண்டு அது எழுந்தது. உடலெங்கும் இரத்தம் பசபசத்து வழிந்தது. 'ம்ம்றூறூ' என்று உறுமியபடி அவனை அறைவதற்காக அது எகிறிப் பாய்ந்தது. மூக்கும் கண்களும் சிவந்து துடித்தன அதற்கு.

வைரவன் கொஞ்சம் பின்வாங்கினான். காட்டுக் கத்தியை இறுக்க மாகப் பிடித்தபடி மூச்சுவாங்க மறுதாக்குதலுக்கு அவன் தயாரானான்.

எல்லாரும் நித்தரையிலிருந்து எழுந்து விட்டார்கள். மங்கிய தீப்பந்த ஒளியில் அச்சத்தோடு உறைந்து போய் நின்றார்கள் அவர்கள்.

கிட்டியின் மனதுள் மின்னல் அறைந்தது. கரடியோடு சண்டைக்குப் போனாள் அது கடைசி மூச்சை விடும்வரை தாக்குப் பிடித்து மூர்க்கமாகத் தாக்குமென்பதை அவள் நன்றாக அறிந்திருக்கிறாள்.

தனது இடது கைப்புறமாகக் கிடந்த காட்டுக் கத்தியை அவள் எடுத்தாள். நன்றாகச் சாணை தீட்டிய கத்தி. உறுதியோடு கத்தியைப் பிடித்து தூக்கி ஓங்கியவாறு யாரும் எதிர்பாராத விதமாக கரடியின்

பின்புறமாக அவள் பாய்ந்தாள். பாய்ந்த வேகத்தில் கரடியின் பின்கழுத்தில் அவளது கத்தி பளீரெனக் கொத்தி சதையுள் அழுந்திற்று. அழுந்திய கத்தியை கணங்களில் வெளியே இழுக்க ரத்தம் பீய்ச்சி அவளது முகத்தில் சீறி நனைத்தது. அதை கவனியாமலே கழுத்தின் மறுபக்கத்திலே அவள் கத்தியை அழுத்திப் பாய்ச்சினாள். நன்கு உள்ளே இடுக்கினாள்.

''வைரவா, நடுநெஞ்சிலை குத்தடா'' என்றாள் கிட்டி பலத்த சத்தமாக.

வைரவன் நிலைதடுமாறிச் சரிந்த கரடியின் நடுநெஞ்சில், தன் முழுப் பலத்தையும் திரட்டி கத்தியைச் செருகினான். செருகிய கத்தியை மேலும் உள்ளே தள்ளினான். சதை சளசளத்தது.

தீனமாக அலறிய கரடி மல்லாக்காகச் சரிந்தது. கால்களை விலுக்விலுக்கென்று உதைத்தது. எழ முயன்றது. இரத்தம் அதன் உடலெங்கும் சர்சர்ரெனஅறு ஊற்றாய் சீறிச் சிதறிற்று. தன் கடைசிப் பிரயத்தனத்திலும் தோற்றுப் போன கரடி மூச்சிழுத்த படியே அடங்கத் தொடங்கிற்று. மெல்ல மெல்ல அதன் இயக்கம் ஒய்ந்து கரைந்துகொள்ள, அதன் நெஞ்சில் இருந்த கத்தியை உருவி இழுத்தான் வைரவன். கொளகொளத்த சதை, துணுக்குகளாய் வழிந்தது. கொட்டிற்று. இரத்தம் கட்டியாய் வெடித்துச் சீறி ஓய்ந்தது, 'வ்வ்க்...' என்ற அவலமான சத்தத்தோடு கரடி தனது இறுதி மூச்சை விட்டது.....

காட்டுக்குள் வேட்டை தேடிப் போன முண்டன் உதுரன், சுல்லியன் என்ற நாய்கள் சத்தத்தோடு அங்கே வந்து கரடியின் மீது பாய்ந்தன. அந்தத் சத்தத்தில் ஏனைய நாய்களும் திமுதிமுவென அங்கு கூடின.

கிட்டி தன் முகத்திலும் தோளிலும் சிதறியிருந்த கரடி இரத்தத்தை வழித்தெறிந்துவிட்டு, 'பூவெல்லாம் இரந்தச் சேறாப் போச்சு. கழுவித்தான் எடுக்க வேணும்,'' என்றாள், இன்னும்

திகைப்பு மாறாமல் அவளைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த வல்லியனிடம்.

## 28

கிட்டி அந்த மணிப்புறாவையே பார்த்துக்கொண்டிருந் தாள். மெலிந்த உடலும் தவிட்டு நிறத்தில் வெள்ளை நிறப் புள்ளிகள் நிறைந்த மேற்பாகமும் கொண்ட மணிப்புறாவைக் கண்டால் கிட்டிக்கு தனது கடைக்குட்டிப் பெண்ணான மானிதான் நினைவிலே வருவாள். மானியும் இந்த மணிப்புறாவைப் போலதான் மெலிவும், மங்கல் நிறமும் உடையவள்.

–'க்ரு க்ரூக், க்ரூக், க்ரூ க்ரூ. க்ரூ. க்ரூ.' என்று தொடர்ச்சியாகச் சத்தமிட்டுக் கொண்டிருந்தது மணிப்புறா. அது யாரையோ சோகத்தோடு கூப்பிடுவதைப் போலிருந்தது.

என்ன நினைத்ததோ அது தன் கருநிறப் பின் கழுத்தைத் திருப்பிப் பார்த்து விட்டு ஜிவ்வென அங்கிருந்து பறந்தது. அது பறந்து போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள் கிட்டி.

உதுரன் அவருக்குப் பின்னே வந்து நின்றான். ''மழையடிக்கப் போகுதோ?'' என்றான்.

கிட்டி நினைவு கலைந்தாள்.

''மழை வராது''

''வானம் கறுக்குது''

''கலைஞ்சு போயிலும்.''

''அந்தரக் குருவி சத்தம் போடுதே!''

''எங்கை?''

''அதெல்லாம் ஒரு கதைக்கடா, சொன்னான்.... கிடாய் மாடா''

கிட்டி பிறகும் ''ஐயா'' என்றாள். பவ்வியமாக.

''சொல்லடி...''

''இன்னொரு விஷயம் சொல்ல ஐயாவுக்கு காணிக்கை கொண்டு வந்திருக்கிறம்...''

வியப்போடு கிட்டியைப் பார்த்தார் பட்டங்கட்டி சின்னையா. குரலில் அதிசயம்.

''என்னடி அது சந்தோஷ காரியம்?''

கிட்டி ஐயனைப் பார்த்து சைகை செய்தாள். ஐயன் அதற்காகவே காத்திருந்தவன் போலத் தலையை அசைத்தான்.

ஐயன் அவசர அவசரமாக-பன்புல்லில் இழைத்த சிறு பெட்டியொன்றை எடுத்து வந்து அதைக் கிட்டியிடம் கொடுத்தான். கிட்டி அந்தப் பெட்டியை மிகுந்த மரியாதையோடு பட்டங்கட்டி சின்னையாவின் கையிலே கொடுத்தாள்.

பெட்டியினுள்; வெற்றிலை, தானியங்கள், சில அரளிப் பூக்கள்.

''ஆருக்கு உன்னட மோளுக்கோடி சோறு கொடுக்கிறாய்....''
''சரி ஐயா...''

''உன்னைப் பார்த்தாலே கன்னியாய் இருக்கிறாயடி. உனக்கும் மோளாக ஒரு கன்னயோ? சந்தோஷம்தான்...ஆர் ஆம்பளை? எப்ப சோறு குடுக்கிறது?''

பட்டங்கட்டியரின் கண்களில் எல்லை மீறிய சந்தோஷம்.

''அவன் பெரியான் தானய்யா.... பவுர்ணமியிலன்றுதான் சோறு குடுக்கிறம் ஐயாவும் வரவேணும்...''

மீண்டும் சிரித்தார் பட்டங்கட்டி சின்னையா.

